


# இடம் பொருள் கலைஞர்

91

**மகிழவன்**

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் நுழைவுத் தேர்வு ரத்து!

அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் 13.11.2006 அன்று பொது நுழைவுத் தேர்வினை அகற்றிட, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக அமைக்கப்பட்ட, கல்வியாளர்கள் கொண்ட குழுவின் தலைவர் டாக்டர்.ஆனந்த்கிருஷ்ணன் அவர்கள் அறிக்கையினை அளித்த போது...



# நுழைவுத் தேர்வு ரத்து!

## முன்னோடி தமிழ்நாட்டின் முகவரி

சமுதாயப் புரட்சி இயக்கமான கழகத்தின் ஆட்சிக் காலம் என்றால், விளிம்புநிலை மக்களுக்கு, கல்விநீரோடை விரைந்து பாயும் ஆட்சிக் காலம் என்பது வரலாறு. கல்லூரி வாசனை காணாத ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களும் இளைஞிகளும், உயர்கல்வி பெரும் வாய்ப்புகளை அதிக அளவில் உருவாக்கிய முதலமைச்சராக கலைஞர் இருந்தார் என்பதை, தமிழ்நாட்டின் கல்வித்துறைப் புள்ளிவிவரங்கள் சொல்லும். 1969-ஆம் ஆண்டு முதல் அதிக அளவில் அரசுக் கல்லூரிகளைத் தொடங்கியதுடன், கட்டணங்களின்றி படிக்க வழி ஏற்படுத்தினார். வெளியூர் மாணவர்கள் தங்குவதற்கு விடுதிகள், கல்வி உதவித்தொகைகள் என அடுத்தடுத்து கல்வி வளர்ச்சிக்கான பாதைகளைத் திறந்து வைத்தவர் கலைஞர்.

### திகைத்து நின்ற மாணவர்கள்

கல்லூரிக் கல்வி எளியவர்களுக்குக் கிடைத்த நேரத்தில்தான், 1984- ஆம் ஆண்டு, எம்.ஜி.ஆர். ஆட்சியின்போது TNPCEE எனும் தமிழ்நாடு தொழில்முறை நுழைவுத் தேர்வினை அறிமுகம் செய்கிறார்கள். பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட மேற்படிப்புகளுக்கு நுழைவுத் தேர்வு மூலமே மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர், எனும் அறிவிப்பால் முதல் தலைமுறைப் பட்டதாரிக் கனவு கண்ட மாணவர்கள் திகைத்து நின்றனர்.

அந்த நுழைவுத் தேர்வால், கிராமப்புற மாணவர்கள் பாதிக்கப்படுவர் என்றும் பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து படிக்க, கிராமப் புறங்களில் வசதி வாய்ப்பில்லை என்றும் எதிர்ப்புகள் எழுந்தன. "இந்தத் தேர்வு சமூகநீதிக்கு எதிரானது, தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காகப் போராடிய, பெரியார் மற்றும் அண்ணாவின் கொள்கைகளுக்கு எதிரானது. எனவே, இந்த அறிவிப்பை உடனடியாக ரத்து செய்யவேண்டும்" என உரத்துக் குரல் எழுப்பினார் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர்.

கழகத்தின் சார்பில், கண்டனப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால், எதையும் ஏற்கும் நிலையில் இல்லாத எம்.ஜி.ஆரும், அவரது அரசும் நுழைவுத் தேர்வு ரத்து செய்வதற்கு உடன்படவில்லை.

நுழைவுத் தேர்வை ரத்து செய்யவேண்டும் எனும் கோரிக்கை, உயிர்ப்புடனே இருந்த நிலையில், 1989 ஆட்சிக் காலத்திலும், 1996 ஆட்சிக் காலத்திலும் அதற்கான சூழல் கனியாமலேயே இருந்தன. 2005-ஆம் ஆண்டு, அவசர அவசரமாக நுழைவுத் தேர்வுமுறையை ரத்து செய்வதாக, ஜெயலலிதா அறிவித்தார். அதன்படி பிளஸ்-2 தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலேயே தொழில் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை நடைபெறும் என்றும் அறிவித்தார். இந்நிலையில், "மாணவர்கள் சேர்க்கைக்கான நடைமுறைகளை மாற்றுவதற்கு அரசுக்கு உரிமையில்லை. நுழைவுத் தேர்வினை திடீரென ரத்து செய்வதால், எங்களுக்குப் பாதிப்பு ஏற்படும்" என, அந்த ஆண்டு தேர்வு எழுதி வெற்றிபெற்ற மாணவர்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

அதை விசாரித்த நீதிமன்றம் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வை ரத்து செய்து, தமிழ்நாடு அரசு பிறப்பித்த 'உத்தரவு செல்லாது' எனத் தீர்ப்பளித்தது. தமிழக மக்களின் மனநிலை நுழைவுத் தேர்வுக்கு எதிரானதாக இருந்தாலும், தீர்ப்பு மக்களுக்கு ஏமாற்றம் அளித்ததற்குக் காரணம், தேர்தல் அவசரத்தில் அறிவிக்கப்பட்டதுதான் என புரிந்துகொண்டனர் மாணவர்கள்.

### குழு அமைத்து ஆராய முடிவு!

2006-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர், அந்த ஆண்டு ஆளுநர் உரையிலேயே "தொழிற்கல்வி நிறுவனங்களுக்கான நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்படும்" என அறிவிப்பினை வெளியிட்டதுடன், அதை நீக்குதல் தொடர்பாக, ஆய்வு செய்திட குழு அமைக்கப்படும் என்றும் அறிவித்தார். அதன்படி, அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் எம்.ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் குழு ஒன்று அமைத்தார்.

2006-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அந்தக் குழு தனது பரிந்துரைகளை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் அளித்தது. அந்த அறிக்கையில்,பொது நுழைவுத் தேர்வில் பங்கேற்கும் மாணவர்களில் பெரும்பாலோர் கிராமப்புறங்களில் இருந்து வருகிறார்கள் என்றும், அந்த நுழைவுத் தேர்வுக்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்கான பயிற்சி வகுப்புகளை அணுகுவதற்கான வசதிகள் அவர்களின் வட்டாரத்தில் இல்லாத காரணத்தாலும் அந்த மாணவர்களின் பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக. பொது நுழைவுத் தேர்வு பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் பெரும் தடையாக இருக்கிறது எனவும் குறிப்பிட்டது.

> **ஊருக்கு ஒரு பொறியியல் பட்டதாரி என்கிற நிலை மாறி, வீட்டுக்கு ஒரு பொறியியல் பட்டதாரி என்ற நிலையைத் தமிழ்நாடு அடைந்துள்ளது. அதற்கான அடித்தளத்தை வலுவாக அமைத்தவர், முத்தமிழறிஞர் கலைஞர்.**

மேலும், பள்ளி இறுதித் தேர்வு என்பது, மாணவர்கள் மீது அதிக சுமையை ஏற்படுத்தும் தீவிர தேர்வு முறையாக உள்ளது. அதாவது, அதனால் பொது நுழைவுத் தேர்வு என்பது மாணவர்களுக்குக் கூடுதல் சுமையாக இருக்கும் என்பதால், அதை நடத்த வேண்டிய அவசியமில்லை என, பரிந்துரை குறிப்பிட்டிருந்தது.

அந்த பரிந்துரைப்படி நுழைவுத் தேர்வை நீக்கும் சட்ட முன்வடிவு 6.12.2006 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப் பட்டது. 5.3.2007 அன்று சட்டம் (ACT NO.3 OF 2007) அரசிதழில் வெளியிடப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று 7-3-2007 அன்று முதல் நடைமுறைக்கு வந்தது. நுழைவுத் தேர்வு நடைபெறுவதற்கு முன்பே சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டது.

இந்த நிலையில், இந்தச் சட்டத்தை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் சிலர் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கு நிலுவையில் இருந்து போதே, நுழைவுத் தேர்வு ரத்து தொடர்பான சட்டம் அமலுக்கு வந்து விட்டது. வழக்கினை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் மிஸ்ரா மற்றும் சம்பத்குமார் ஆகியோர் 27-4-2007 அன்று அளித்தத் தீர்ப்பில் அரசு கொண்டு வந்த சட்டம் சரியானதே எனத் தீர்ப்பு வழங்கினர்.

### முன்னிலையில் பொறியியல் கல்வி


2006-ஆம் ஆண்டில், நுழைவுத் தேர்வு இருந்தபோது, தமிழ்வழியில் மேல்நிலைப் பள்ளியில் தேர்ச்சி பெற்ற 11 ஆயிரத்து 799 மாணவர்கள் மட்டுமே பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்தனர்; நுழைவுத் தேர்வு ரத்து செய்த பின்னர் மாணவர்கள் எண்ணிக்கை 19 ஆயிரத்து 966 எனவும், 2008 ஆம் ஆண்டு 34 ஆயிரத்து 39 எனவும், 2009-இல் 35 ஆயிரத்து 434 எனவும், 2010-ஆம் ஆண்டு 54 ஆயிரத்து 460 எனவும் அதிகரித்தது. தமிழ்வழிக் கல்வியில் பயின்ற கிராமப்புற ஏழை மாணவர்கள் அதிக அளவில் பயன் பெற்றனர். இந்த மாற்றத்தினால், தமிழ்நாட்டின் உயர்கல்வித் துறை அடுத்த கட்டத்திற்கு நகர்ந்தது.

நுழைவுத் தேர்வு ரத்துக்குப் பின்னர், பொறியியல் கல்லூரிகள் அதிக அளவில் உருவாக்கப்பட்டன. குறிப்பாக, இந்திய அளவில் ஒரு இலட்சம் பேருக்கு 195 பொறியியல் இடங்கள் இருக்கின்றன என்றால், தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் பேருக்கு 705 இடங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் ஆண்டுக்கு 1.5 லட்சம் பொறியாளர்கள் உருவாகிறார்கள்.

ஊருக்கு ஒரு பொறியியல் பட்டதாரி என்கிற நிலை மாறி, வீட்டுக்கு ஒரு பொறியியல் பட்டதாரி என்ற நிலையைத் தமிழ்நாடு அடைந்துள்ளது. அதற்கான அடித்தளத்தை வலுவாக அமைத்தவர், முத்தமிழறிஞர் கலைஞர். அந்த அடித்தளம்தான், இன்று இந்தியாவுக்கே வழிகாட்டியாகத் தமிழ்நாட்டை முன்னிலையில் வைத்துள்ளது.

**...வலம் வருவோம்**

## வாழ்த்துகள் சீர் வாசகர் வட்டம்!



தமிழில் முக்கியமான அரசியல், இலக்கிய நூல்களை மக்கள் பதிப்பாகக் குறைந்த விலையில், தரமான கட்டமைப்புடன் வெளியிட்டு வருகிறது, சீர் வாசகர் வட்டம். தரமான இலக்கியங்கள் எல்லாம் மக்கள்மயமாக்க வேண்டும் என்பதே, எங்கள் நோக்கம் என அறிவிக்கும் 'சீர் வாசகர் வட்டம்', பதிப்பகங்களுடன் இணைந்து முக்கிய நூல்களையும் கொண்டு வர உள்ளது. அந்த முயற்சியில், முதற்கட்டமாக, தமிழில் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்ற பி.எச்.டேனியல் ஆங்கிலத்தில் எழுதி, எழுத்தாளர் இரா. முருகவேள் அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்ட 'RED TEA - எரியும் பனிக்காடு' நாவலை, ஐம்பொழில் பதிப்பகத்தோடு இணைந்து பதிப்பிக்க உள்ளனர்.

408 பக்கங்கள் கொண்ட இந்நூல் மிகத் தரமான தயாரிப்பில் 125 ரூபாய்க்கு விற்பனை செய்ய உள்ளனர். இதற்கான முன்பதிவினை, சீர் வாசகர் வட்டம் ஏற்பாடு செய்துள்ளது. பெரும்பாலான மாவட்டங்களில் புத்தகக் கடைகள், இலக்கிய அமைப்புகள் என 34 இடங்களில் வாசகர்கள் முன்பதிவு செய்துகொள்ள, விரிவான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். நூல்களைப் பரிசளிப்பவர்களும், கல்லூரி மாணவர்களும் இளம் வாசகர்களும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மக்கள் பதிப்பு நூல்கள் என்கிற இலக்கில் வாசிப்பு இயக்கம் வளரட்டும்!

## ஃப்ளாஷ்பேக்



ஈரோடு இளையகோபால்





### இலைஞர் அணியின் தொடக்க காலம்!

கழகத்தின் இளைஞர் அணி தொடங்கப்பட்டபோது, இன்றைய கழகத் தலைவர் - நமது முதல்வர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு, அணியை வலுவாக்கினார். ஈரோட்டில் கழக நிகழ்வில் பங்கேற்க வந்தபோது, இளைஞர் அணியில் பணியாற்றிய நான் சந்தித்து, வாழ்த்துப் பெற்றேன். உடன், அண்ணன் திருச்சி சிவா எம்.பி., எவரெஸ்ட் மு.கணேசன், தாரைமணியன், கணேசபாண்டியன், எழில் ஆகியோர் இருந்தனர்.

**-ஈரோடு இளையகோபால்,**
**தலைமைக் கழகச் சொற்பொழிவாளர்,**
**மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்,ஈரோடு தெற்கு .**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### ஜனநாயகம் வாழ்க்கை நெறி!

1958-ஆம் ஆண்டு, அக்டோபர் 24-ஆம் தேதி கே.வி.கே சாமி நினைவு மன்றத்தின் ஆண்டு விழா, சென்னை புரசைவாக்கத்தில் நடைபெற்றது. அப்போது, பேரறிஞர் அண்ணா, ஜனநாயகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து, விளக்கிப் பேசினார். அரசியலில் தெளிவு இருந்தால், சலிப்புத் தோன்றாது என்றும், நாட்டு மக்கள் விழிப்புணர்வு பெற, ஜனநாயகப் பயிற்சி தேவை என்றும், ஜனநாயகம் என்பது ஆளுகிற முறை மட்டுமல்ல; அது ஒரு வாழ்க்கை நெறி என்றும் விளக்கினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

639

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131